# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**பைத்துல் ஃபுதூஹ் ,இலண்டன்.** **நாள்: 23.11.2007**

---

இன்று உலகிலுள்ள கிழக்கத்திய நாடுகளிலும் மேற்கத்திய நாடுகளிலும் அமைதியின்மை நிலவுவதை நாம் எல்லா இடங்களிலும் பார்க்க முடிகின்றது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளும், வளர்ச்சியில் மற்றவர்களை விட பின்தங்கியுள்ள நாடுகளும் அமைதியின்மைக்கு இரையாகியுள்ளன. சில நாடுகளில் வாழ்பவர்கள் தங்கள் நாட்டிற்குள் நிலவும் குழப்பத்தின் காரணமாக கவலையடைந்துள்ளனர். மேலும் அதனால் அவர்கள் அச்சத்திற்கு ஆளாகியிருக்கின்றார்கள். சில நாடுகளில் மற்ற நாடுகளின் தலையீட்டின் காரணமாக அங்குள்ள மக்கள் அச்சத்திற்கு ஆளாகியிருக்கின்றார்கள். சிலர் தீவிரவாதிகளின் செயல்கள் காரணமாக கவலையடைந்துள்ளனர். அச்சத்திற்கு ஆளாகியுள்ளனர். இந்த தீவிரவாத செயல்கள் அரசியல் காரணங்களுக்காக செயல்பட்டாலும் சரி அல்லது பெயர்தாங்கி மார்க்கத்தின் பெயரால் செய்யப்பட்டாலும் சரி. அதன் விளைவு மிகவும் மோசமானதாக இருக்கின்றது. மார்க்கத்தின் பெயரால் அல்லது மார்க்கத்துடன் தொடர்புபடுத்தி இந்த தீவிரவாத செயல்கள் செய்யப்படுவதால் அதனை பெயர்தாங்கி மார்க்கம் என்றே நான் கூறுவேன். இதனை செய்பவர்கள் அதனை மார்க்கத்தின் பெயரால் அல்லது தங்களது சுய கருத்திற்கேற்ப இஸ்லாத்திற்கு எதிரான விஷயங்களை உருவாக்கி அதனை செயல்படுத்த முயல்கின்றனர். எவ்வாறிருப்பினும், மார்க்கம் ஒருபோதும் தீவிரவாதத்தின் போதனைகளை மக்களுக்கு போதிக்கவில்லை. குறிப்பாக இஸ்லாமிய போதனைகள் முற்றிலும் இப்படிப்பட்ட செயல்களுக்கு எதிராக இருக்கின்றது. ஓர் அரசாங்கத்தின்கீழ் அதன் குடிமகனாக இருந்து கொண்டு இத்தகு செயல்களை செய்வது மனிதத்துவம் மற்றும் இறைவனின் படைப்பினங்கள் மீது இறைவனின் பெயரால் கொடுமைகள் இழைக்கப்படுவதுதான் துர்பாக்கிய நிலையாக இருக்கின்றது. சில நாடுகள் போரின் அச்சத்தின் காரணமாக கவலை அடைந்துள்ளன. சில நாடுகளை இயற்கை சீற்றங்கள் சூழ்ந்துள்ளன. அதன் காரணமாக இந்த நாடுகளில் வாழ்பவர்கள் கவலையடைந்து அச்சத்திற்கு ஆளாகியுள்ளனர்.

சுருக்கமாக, இன்று இறையச்சத்துடன் மனிதர்கள் மீது கருணை காட்டும் எண்ணமுடைய ஒவ்வொரு உள்ளமும் இதற்கான காரணமென்ன? என்பதை சிந்திக்க ஆரம்பித்திருக்கின்றது. எங்குமே முழுமையாக மக்களுக்கு நிம்மதி இல்லை. அவர்களின் உள்ளங்களுக்கு அமைதி கிடைக்கவில்லை. இன்று இத்தகைய வேதனையுடன் இதுபற்றி ஓர் அஹ்மதியால்தான் சிந்திக்க முடிகின்றது. எனக்கு தபாலில் வரும் அதிகமான கடிதங்களில் உலகின் அமைதிக்காகவும், நாட்டின் அமைதிக்காகவும் துஆ செய்யும்படி கூறி அஹ்மதிகள் எழுதுகின்றனர். இந்த கடிதங்கள் எழுதுபவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் பல்வேறு வழிகளில் எனக்கு தெரிய வரும் தகவல்கள் மூலம் அஹ்மதிகளில் பெரும்பாலார் உலகத்தின் தற்போதுள்ள நிலைமை அல்லது தங்களது நாடுகளிலுள்ள அமைதியின்மை காரணமாக மிகவும் கவலையடைந்துள்ளனர்.

தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உருவாக்கிய புரட்சியின் விளைவாகத்தான் இப்படிப்பட்ட சிந்தனை அஹ்மதிகளிடம் ஏற்பட்டிருக்கின்றது. அவர்களது ஈமானின் நிலையை இந்த காலத்தின் இமாம் மாற்றியதன் விளைவாகவேஇந்த சிந்தனை அவர்களிடம் ஏற்பட்டது. இறையச்சமும் இறைவனது படைப்பினங்களுடன் கருணையுடன் நடந்து கொள்வதையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டவர்களின் உள்ளத்தில் உருவாக்கி விட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தான் அனுப்பப்பட்டதன் நோக்கத்தை விளக்கியவாறு பல்வேறு இடங்களில் அதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

**ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஈமானை வலுப்படுத்துவதற்காகவும், இறைவன் இருக்கின்றான் என்பதை மக்களுக்கு நிரூபித்துக் காட்டுவதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். ஏனென்றால், ஒவ்வொரு சமுதாயத்தின் ஈமானின் நிலையும் பலவீனம் அடைந்திருக்கின்றது. மறுவுலகம் என்பது ஓர் கதையாக கருதப்படுகின்றது. எந்த அளவு மனிதன் உலகத்தின் மீதும் உலகப் பொருட்களின் மீதும் உறுதி கொள்கின்றானோ, எந்த அளவு அவனுக்கு உலகப் பொருட்கள் மீது நம்பிக்கை இருக்கின்றதோ அந்த அளவு இறைவன் மீதும் மறுமை நாளின் மீதும்

அவனுக்கு நம்பிக்கை இல்லை என்பதை ஒவ்வொரு மனிதனும் தனது செயல் மூலமாக வெளிப்படுத்துகின்றான். நாவு ஒன்றை பேசினாலும் உள்ளத்தில் உலகத்தின் நேசமே மிகைத்து நிற்கின்றது. எனவே உண்மை மற்றும் ஈமானின் காலம் மீண்டும் வர வேண்டும் என்பதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். அதன் மூலம் உள்ளங்களில் இறையச்சம் ஏற்பட வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் உள்ள உறவில் ஏற்பட்டுள்ள மாசை அகற்றி இறையன்பு மற்றும் மனத்தூய்மையுடன் உள்ள தொடர்பை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவே இறைவன் என்னை அனுப்பி யுள்ளான். உண்மையை வெளிப்படுத்துவதன் மூலமாக மதங்களுக்கிடையிலுள்ள சண்டைகளை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தின் அடித்தளத்தை நிறுவுவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். உலகத்தின் கண்களிலிருந்தும் மறைந்து போன அந்த மார்க்க உண்மைகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவே நான் வந்துள்ளேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனின் முக்கிய கட்டளையானது இரண்டேயாகும். முதலாவதாக, ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டு இறைவன் மீதுள்ள அன்பில் அவனது கட்டளைகளுக்கு முற்றிலும் கீழ்படிந்து நடப்பதாகும். இரண்டாவதாக, தமது சகோதரர்களுடனும் மனித இனத்துடனும் கருணையுடன் நடந்து கொள்வதாகும்.

இந்த காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டவர்கள் நற்பாக்கியம் பெற்றவர்களாவர். உலகில் எல்லா பாகங்களிலும் குழப்பமும் சுயநலமும் பெருகி விட்ட காலகட்டத்தில் அல்லாஹ் அவர்களை அனுப்பினான். இந்த இமாமை ஏற்றுக் கொண்டதன் விளைவாக அல்லாஹ் நமக்கு இத்தகு குழப்பங்களிலிருந்தும் தீமைகளிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்கான வழியை நமக்குக் காட்டித் தந்துள்ளான். எனவே, ஏகத்துவத்தை உலகில் நிலைபெறச் செய்ய முயற்சி செய்வது ஒவ்வொரு அஹ்மதியின் பணியாக இருக்கின்றது. இறைவனுடன் சொந்த உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவனது படைப்பினங்களிடம் கருணையுடன் நடந்து கொள்ள எல்லா நேரமும் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் கடந்த நூறு வருடங்களாக அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த கடமைகளை நிறைவேற்ற தன்னால் இயன்ற வரை முயற்சி செய்து வருகிறது. கருணை உணர்வின் அடிப்படையில் நாம் இந்த மக்களுக்கு இந்த குழப்பங்கள், இந்த இயற்கையின் சீற்றங்களால் ஏற்பட்டுள்ள பேரழிவுகள் ஆகியவற்றிற்கான காரணங்களை எடுத்துக் கூற வேண்டும். இதற்கான காரணம் என்ன? என்பதை உலகிலுள்ள ஒவ்வொரு நபருக்கும் தெரிவிக்க வேண்டும். தங்களது சுற்றுப்புறத்திலுள்ள மக்களுக்கு இதுபற்றி தெரிவிக்க வேண்டும். பத்திரிகைகளுக்கு கடிதம் எழுதி அல்லது மற்ற வழிகள் மூலம் முன்பை விட அதிகமாக இந்த மக்களிடம் நீங்கள் இறைவனை அடையாளங்கண்டு கொள்ளவில்லையென்றால், அவனது சட்டங்களுக்கு ஏற்ப நீங்கள் செயல்பட வில்லையென்றால், இந்த அமைதியின்மை ஒருபோதும் முடிவுக்கு வராது என்று கூறுங்கள். இந்த குழப்பங்கள் ஒருபோதும் முடிவுக்கு வராது. விண்ணிலும் மண்ணிலுமிருந்து வெளிப்படும் இந்த பேரழிவுகள் ஒருபோதும் முடிவுக்கு வராது. அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவருடன் அவரை பரிகாசம் செய்யும் வகையில் நடந்து கொள்வது, வரம்பு மீறி அநீதியிழைப்பதில் முன்னேறிச் சென்று அதில் பிடிவாதமாக நிலைத்திருப்பது ஆகிய இவையெல்லாம் இருக்கும் வரை ஒருபோதும் உலகில் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது.

பேரழிவுகளை எடுத்துக் கொள்ளுங்கள். நாளுக்கு நாள் இதன் வேகம் அதிகரித்து வருகிறது. அவற்றின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு இருந்து வருகிறது. பூமியின் தட்ப வெப்ப நிலையிலுள்ள மாற்றங்கள், சீதோஷன நிலையிலுள்ள மாற்றங்கள், மேலும் பல்வேறு மாற்றங்கள் இவற்றின் நிகழ்வுக்கு காரணமாக கூறப்படுகின்றது. ஆனால், இன்னொன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். உலகிற்கு இதுபற்றி கூற வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. அதாவது நூறு வருடங்களுக்கு முன்னர் ஒருவர் வாதம் செய்தார். என்னை இறைவன், உலகை சீர்திருத்துவதற்காக அனுப்பியுள்ளான் என்பதே அவரது வாதம். எனக்கு ஆதரவாக அல்லாஹ் விண்ணிலும் மண்ணிலும் அடையாளங்களைக் காட்டுவான். பூகம்பங்கள் நிகழும். பேரழிவுகள் ஏற்படும். மக்கள் எனது குரலின் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால் பெரும் ஆபத்துகள் அவர்களை சூழ்ந்து கொள்ளும் என அவர்கள் கூறினார்கள். இப்போது அவர்கள் கூறிய விஷயங்கள் உண்மையானவை என்பது தெரிய வருகிறது.

பூகம்பங்கள் எந்த அளவுக்கு எண்ணிக்கையில் அதிகமாகவும், கடுமையாகவும் வந்துள்ளன என்பதை பார்க்கும் போது அவற்றிற்கு ஈடாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எந்த பூகம்பமும் நிகழவில்லை. கடந்த சில நாட்களுக்கு முன் பங்களாதேஷில் கடுமையான புயல் வீசியது. 46 வருடங்களுக்கு பிறகு இத்தகு கொடும்

புயல் வீசியுள்ளது என்று கூறப்படுகின்றது. ஓர் கணிப்பின்படி இந்த புயலின் காரணமாக 15,000 நபர்கள் மரணித்திருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்படுகிறது என நான் கூறுவதற்கு காரணம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முழுமையாக எவரும் இன்னும் செல்ல முடியவில்லை. அதனால் இழப்புகள் பற்றி கணிக்க முடியவில்லை. 6 லட்சம் நபர்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். இந்த பகுதிகளில் ஓரளவு அஹ்மதிகளின் எண்ணிகையும் இருந்து வருகிறது. இவர்களுக்கும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. புயல் வரும் போது பொருள் இழப்பு ஏற்படுவது இயற்கையே. ஆனால் இதுவரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இதுவரை எவ்வித உயிர் இழப்பும் அஹ்மதிகளுக்கு அங்கு ஏற்படவில்லை. அல்லாஹ் அஹ்மதிகளை பாதுகாப்பில் வைப்பானாக. ஆமீன்.

**Humanity First** அமைப்பை சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் **UK** லிருந்தும் **Canada** -விலிருந்தும் உதவிக்கான பொருள்களை எடுத்துக் கொண்டு அங்கு சென்றுகொண்டிருக்கிறார்கள். ஜமாஅத் மனித இனத்தின் மீதுள்ள கருணை உணர்வின் அடிப்படையில் அங்கு தொண்டு செய்ய செல்கின்றது. அநீதியிழைக்கப்பட்டவர் அல்லது துன்பத்திற்கு ஆளாகியிருப்பவர் எங்கிருந்து கொண்டு உதவிக்கு அழைத்தாலும் ஜமாஅத் அந்த இடத்திற்கு செல்கிறது. கடந்த இரண்டு வருடங்களாக பங்களாதேஷிலுள்ள முல்லாக்கள் அஹ்மதிகளை மிகவும் சிரமத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாக்கியிருக்கின்றனர். ஜமாஅத்திற்கு எதிராக ஊர்வலங்களை நடத்துவது, பள்ளிவாசல்களுக்கு இழப்பை ஏற்படுத்துவது, அஹ்மதிகளின் உடைமைகளுக்கு சேதம் விளைவிப்பது போன்ற சம்பவங்கள் அங்கு நிகழ்ந்துள்ளன. படிப்பறிவில்லாத அப்பாவிகளை இஸ்லாத்தின் பெயரால் தூண்டி விட்டு கொடுமையிழைக்க வைப்பது இப்போது முல்லாக்களின் பழக்கமாகி விட்டது. அதனை அவர்கள் செய்து வருகின்றார்கள். அவ்வாறிருந்தும் தேவையுடைய ஒவ்வொருவருக்கும் ஜமாஅத் உதவி செய்கின்றது. ஏனென்றால், இது ஓர் அஹ்மதியை மற்றவரிடத்திலிருந்தும் வேறுபடுத்திக் காட்டுகின்ற ஒரு தனி சிறப்பாகும். அவ்வாறு இருக்க வேண்டும். ஏனென்றால் எனது பணிகளில் மிக முக்கியமான ஒரு பணி மனிதயினத்திடம் கருணை காட்டுவதாகும் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பங்களாதேஷில் மட்டுமின்றி அஹ்மதிகளுக்கு எதிராக ஓர் கொடுமையான சட்டத்தை இயற்றி அஹ்மதிகளின் மார்க்க சுதந்திரத்திலுள்ள உண்மையைப் பறிக்கின்ற பாகிஸ்தானிலும் நாம் மனித இனத்திற்கு எவ்வித பாகுபாடுமின்றி தொண்டு செய்து வருகின்றோம். ஏக இறைவனை பற்றிய உண்மையான அறிவுடைய, எல்லா விதமான இணைவைத்தலிலிருந்தும் தூய்மையடைந்துள்ள அப்பாவி அஹ்மதிகள் அல்லாஹு அக்பர் என்று கூறுவதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் தடை விதித்திருக்கின்றது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அளவு கடந்த நேசம் வைத்துள்ள அஹ்மதிகள் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் மீது தரூதும் ஸலாமும் ஓத தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட குற்றங்களுக்கான தண்டனை பல வருட சிறைவாசமாகும். அஹ்மதிகளின் உள்ளத்திலிருந்து அல்லாஹ்வின் மீதுள்ள அன்பையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள நேசத்தை வெளிப்படுத்துவதை சட்டத்தால் பிடுங்க முடியாது என்பதும், உள்ளங்களுக்கு எவ்வித தடையையும் எவரும் ஏற்படுத்த முடியாது என்பதும் ஓர் தனிப்பட்ட விஷயமாகும். ஆனால் நான் கூற விரும்புவது என்னவென்றால் இந்த கொடுமைகள் இழைக்கப்பட்ட பிறகும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் பாகிஸ்தானில் கடுமையான பூகம்பம் வந்த போது லட்சக்கணக்கான மக்கள் மரணித்த அந்த சமயத்தில் மக்கள் குடியிருந்த பல இடங்களும் பூமிக்கு அடியில் சென்று விட்டன. அந்த சமயத்திலும் ஏற்கனவே எண்ணற்ற கொடுமைகள் இழைக்கப்பட்ட பிறகும் கூட, அரசாங்கம் சட்டத்தின் பிடியில் அஹ்மதிகளுக்கு கொடுமையிழைத்த பிறகும் கூட அந்த சமயத்தில் ஜமாஅத் திறந்த உள்ளத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்து வந்தது. பாதிக்கப்பட்ட இடங்களில் முகாமிட்டு பல மாதங்கள் மக்களுக்கு தேவையான உணவு வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சைக்கான வசதிகள் செய்யப்பட்டன. மருந்துகளும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் இருந்த நமது முகாமில் ஒருமுறை எதிரிகள் தீ வைத்த பிறகும் கூட மனித இனத்திடம் கொண்ட கருணை உணர்வின் அடிப்படையில் நாம் இந்த பணியில் எவ்வித தொய்வும் ஏற்படவிடவில்லை.

பூகம்பத்திற்கு பிறகு ஏற்பட்ட பல்வேறு நோய்களின் காரணமாக மக்கள் அச்சத்திற்கு ஆளாகியிருந்தார்கள். பாகிஸ்தானிலுள்ள காஷ்மீரின் ஒரு பகுதியில் இத்தகைய நோய்களால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு கோடிக்கணக்கில் ரூபாய் செலவு செய்து **Humanity First** அமைப்பை சார்ந்தவர்கள் ஒரு **Ward** ஏற்படுத்தினார்கள். மக்களுக்கு சிகிச்சை நல்ல முறையில் செய்யப்பட்டது. நம்மீது கொடுமை இழைக்கப்பட்ட பிறகும் கூட நாம் நமது பணிகளை நல்ல முறையில் செய்தோம். செய்து கொண்டிருக்கின்றோம். ஏனென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமது இயல்பிலேயே நீங்கள் மனிதயினத்திடம் உண்மையான அனுதாபத்தை காட்ட வேண்டும் என்பதை பதித்து

விட்டார்கள். ஆனால் அல்லாஹ் தனது அன்பிற்குரியவருக்கு ஆதரவாக மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளான். இவர்கள் புரியக்கூடியவர்களாக இருந்தால் இப்படிப்பட்ட எச்சரிக்கைகள் இறைவன் புறமிருந்து மீண்டும் மீண்டும் கூறப்படுவதை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். முதலில் பூகம்பம் வந்தது. அதற்கு பிறகு அந்த நாட்டின் நிலையில் என்ன மாற்றம் ஏற்பட்டது? முன்பை விட மிகவும் மோசமான நிலையில் நாடு இருந்து வருகிறது. அரசியல் நிலையும் பொருளாதார நிலையும் மிகவும் மோசமாக இருந்து வருகிறது. பாகிஸ்தானில் எல்லா இடங்களிலும் அமைதியின்மை, குழப்பம், கொலை போன்றவை பொதுவாக பரவிவிட்டது. காலத்தின் அரசாங்கம் ஒன்றை கூறுகின்றது. அதற்கு நேர் எதிராக செயல்பட அரசாங்க பணியாளர்களே எழுந்து நிற்கின்றார்கள். அரசாங்கம் ஒரு விஷயத்தை கூறும்போது அதற்கு நேர் மாற்றமான விஷயத்தை நீதிமன்றங்கள் கூறுகின்றன. அரசியல்வாதிகள் நாட்டின் மீது கருணை காட்டுவதற்கு பகரமாக தங்களது சுய கௌரவம் மற்றும் அந்தஸ்த்தின் பக்கமே முழு கவனம் செலுத்துகின்றார்கள். சட்டம் மதிக்கப்படாமல் இருப்பதை பாகிஸ்தானில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் அறிந்திருக்கின்றார். சட்டத்தை உடைப்பவர்களும் சட்டத்தை செயல்படுத்துபவர்களும் நீதியை நிலைநாட்டுபவர்களும் தங்களது கண்ணியத்தை காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியிலேயே முழு கவனம் செலுத்துகின்றார்கள். அதற்காக நாட்டை பணயம் வைக்க அவர்கள் தயங்கவில்லை. முதலில் இஸ்லாமாபாத்தில் அரசாங்கத்திற்கு உள்ளேயே இன்னொரு அரசாங்கம் செயல்பட்டு வந்தது. இப்போது சவாது என்ற இடத்தில் கிளர்ச்சி வளர்ச்சியடைந்து வருகிறது. அரசாங்கத்தால் வளர்க்கப்பட்டவர்கள் இப்போது அரசாங்கத்திற்கு எதிராக எழுந்து நிற்கின்றார்கள். ஒரு பத்திரிகையில் ஓர் எழுத்தாளர் திறந்த மனதுடன் இவ்வாறு எழுதியுள்ளார்:

சவாதில் தனது ஆட்சியை தனியாக நிறுவியுள்ள இதே நபர்தான் இதற்கு முன்னர் அரசாங்கத்திற்கு தெரியும் வகையில் தான் நினைத்ததையெல்லாம் நிறைவேற்றி வந்தார். அரசாங்கத்தின் உதவியும் அவருக்கு கிடைத்து வந்தது. அவர் வேகமாக வளர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்ய முற்பட்ட போது இப்போது அரசாங்கம் அங்கு ராணுவத்தை பயன்படுத்துகின்றது. வெளியிலுள்ள எதிரிகளால் இப்போது அபாயம் இல்லை. நாட்டிற்குள் இருக்கும் எதிரிதான் எல்லாரையும்விட பெரும் ஆபத்தை ஏற்படுத்துபவராக இருக்கின்றார். அவர் நாட்டை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ராணுவத்தின் பணி இப்படிப்பட்டவர்களை தங்களது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வருவதாக மட்டுமே அமைந்து விட்டது. 1974-ல் அஹ்மதிகளை முஸ்லிமல்லாதவர்கள் என்று கூறியவர்கள், ரப்வாவை திறந்த நகரம் என அறிவித்தவர்கள் ரப்வாவில் அஹ்மதிகள் தங்களுக்கென்று தனி அரசாங்கத்தை ஏற்படுத்தினார்களா? அல்லது இப்போது நாட்டிற்குள்ளேயே பல இடங்களில் தனித்தனி அரசாங்கம் நிறுவப்பட்டுள்ளதா? என்பதை இவர்களே கூறட்டும். சில இடங்களில் அரசாங்கத்தின் நிலையைப் பார்க்கும் போது அரசாங்கத்தால் அந்த இடங்களில் எதுவும் செய்ய முடியாத நிலையை பார்க்கின்றோம். அஹ்மதிகள் எப்போதும் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருக்கின்றனர். இனியும் அவ்வாறுதான் அவர்களது நடைமுறை இருக்கும் - இன்ஷா அல்லாஹ்.

அஹ்மதிகள் சட்டத்தை மதித்த நிலையில் ரப்வாவில் உள்ள தாருன்னஸரில் நதிக்கருகில் உள்ள தங்களுக்கு சொந்தமான நிலத்தை எதிரிகள் வலுக்கட்டாயமாக அபகரித்த போது அவர்களுடன் சண்டை போடுவதற்குப் பதிலாக சட்டரீதியாக செய்ய வேண்டியவற்றை செய்தார்கள். ஆனால், சக்தி படைத்தவர்களுக்கு அஞ்சுங்கள். அவர்கள் சொல்வதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள் என்பதே அங்குள்ள சட்டமாகும். நீதிமன்றம் தீர்ப்பளிக்காத வரையில் இரு பிரிவினர்களில் எவருமே இந்த நிலங்களை எவ்விதத்திலும் பயன்படுத்தக் கூடாது. அதில் எந்த கட்டடங்களையும் கட்டக்கூடாது என **High Court** கட்டளையிட்டிருக்கின்றது. ஆனால் இந்த சம்பவம் நிகழ்ந்து இன்று 30 அல்லது 32 வருடங்கள் கழிந்த பிறகும் கூட நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு தொடர்பாக தனது தீர்ப்பை கூற தைரியம் வரவில்லை. அஹ்மதிகள் **High Court** -ன் உத்தரவை பேணி நடக்கின்றார்கள். ஆனால் இஸ்லாத்தின் பெயரால் அநீதியாக நிலங்களை அபகரித்துள்ள எதிர் தரப்பினர் அந்த நிலங்களில் கட்டிடங்களுக்கு மேல் கட்டிடங்களை கட்டிக் கொண்டே செல்கின்றார்கள். **High Court** -ன் உத்தரவிற்கு எதிராக மற்ற பிரிவு செயல்படுவதை **High Court** ற்கு எடுத்துக் கூறி இது நீதிமன்ற அவமதிப்பாகும் என்பதை சுட்டிக் காட்டிய பிறகும் எங்களைத் தானே அவமதிக்கிறார்கள். அதனால் எங்களுக்குத்தானே இழிவு ஏற்பட்டுள்ளது. உங்களுக்கு அதில் என்ன வந்து விட்டது? என நீதிமன்ற தரப்பிலிருந்தும் பதில் கூறப்பட்டிருக்கின்றது. எனவே, இவர்களது உத்தரவுகள் மற்றும் தீர்ப்புகளின் தரம் முற்றிலும் இரு நிறமுடையவையாக உள்ளன. நாங்கள் நீதியை விரும்புபவர்கள் என இவர்கள் பெருமையுடன் கூறுகின்றார்கள்.

சுருக்கமாக கூறுவதென்றால் ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு அரசாங்க அலுவலகமும் லஞ்சம் வாங்குவதில் மிக உயர்ந்த இடத்தை தொட்டு நிற்கின்றன. நன்மையில் உயர்வான தகுதியை இவர்கள்

பெறவில்லை. தீமைகளில் முன்னேறுவதில் இவர்கள் முனைப்புடன் செயல்படுகின்றார்கள். இதற்கான காரணம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள அந்த காரணமேயாகும். அதாவது ஈமானின் நிலை மிகவும் பலவீனமடைந்துள்ளது. மேலும் மறுவுலகம் என்பது வெறும் கதை என்று கருதப்படுவதே இதற்கு காரணமாக இருக்கின்றது.

இன்று இஸ்லாத்தை குத்தகைக்கு எடுத்திருப்பதாக கூறும் இந்த பெயர்தாங்கி முஸ்லிம்களின் ஈமான் என்பது உலகம் மற்றும் உலக செல்வாக்குடன் மட்டுமே தொடர்புடையவையாக இருக்கின்றது. நாட்டில் ஏற்படும் இந்த எல்லா குழப்பங்களையும் நாட்டைப் பாதிக்கின்ற இயற்கை சீற்றங்களையும் பற்றி சிந்தித்தால் காலத்தின் இமாமை மறுத்ததுடன் மட்டுமல்லாமல் அந்த இமாமை பரிகாசம் செய்து அவரை ஏற்றுக் கொண்டவர்கள் மீது அநீதி இழைப்பதே இதற்கு காரணமாக இருக்கின்றது. இப்போது அங்கு நெருக்கடி நிலை (**Emergency**) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பாகிஸ்தானில் அரசியல்சாசனமும் இனி செயல்படாது என அறிவிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கான உரிமை அரசுக்கு இருக்கின்றதா? இல்லையா? என்பது தனி விஷயமாகும். இதன் சட்டரீதியான தகுதி என்ன? என்பதெல்லாம் தனியாக விவாதிக்க வேண்டிய விஷயமாகும். ஆனால் எப்போதும் போலவே தடியெடுத்தவன் எல்லாம் தலைவன் என்ற நிலைதான் அங்கு நிலவுகிறது. நாட்டில் இதுதான் இப்போது நடக்கின்றது. அரசு **Emergency** ஐ பிரகடனம் செய்த பிறகு அரசியல்சாசனம் செயல்பட தகுந்ததல்ல என அறிவித்து விட்டார்கள். ஆனால், இந்த சட்டத்தை அவர்கள் கோபத்துடன் வேகத்துடன் இயற்றியுள்ளனர் என்றும் கூற முடியாது. ஏனென்றால், அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாதவர்கள் என அறிவிக்கின்ற பிரிவுகளை (**Sections**) அது தொடர்ந்து நீடிக்கும் என அறிவிக்கும் அளவிற்கு மிகுந்த கவனத்துடன் அவர்கள் இந்த சட்டத்தை இயற்றியுள்ளனர். குறிப்பாக இந்த பிரிவுகள் நீடிக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, இன்றைய ஆட்சியாளர்களாகட்டும்; அல்லது அரசியல்வாதிகள் ஆகட்டும் அல்லது வேறு எவராக இருந்தாலும் அவர்களுக்கு இறைவனை விட மிகவும் அதிகமாக மார்க்கத்தின் பெயரால் குழப்பத்தை ஏற்படுத்துபவர்கள் மீதே மிகுந்த பயமும் அச்சமும் இருக்கின்றது. ஒவ்வொரு அரசாங்கமும் அவர்களை மகிழ்விக்க முயற்சி செய்கின்றது. எனவே கடந்த குத்பாவிலும் கூறியது போன்றே நாட்டிற்காக துஆ செய்யுங்கள். துஆ செய்வதுடன் பாகிஸ்தானில் இருக்கும் அஹ்மதிகளில் எவரும் எந்த வகையிலும் எவ்விதத்திலும் இந்த குழப்பங்களில் பங்கு கொள்பவர்களாக இருக்கக் கூடாது. நம்மீது கொடுமைகள் இழைக்கப்பட்ட பிறகும் அவை தொடர்கின்றன. இன்னும் தொடரும் என்ற நிலையிலும் நாம் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். காலத்தின் அரசாங்கத்திற்கு எதிராக எந்த விதமான குழப்பங்களிலும் நாம் பங்கு பெறக் கூடாது. நமது பிரச்சனை இறைவனிடம் இருக்கின்றது. ஆனால், நம்மால் இயன்றவரை நாம் கண்டிப்பாக செய்ய வேண்டியது ஒவ்வொரு அஹ்மதியும் தத்தமது பகுதிகளில் உள்ள மக்களிடம் நீங்கள் சிந்தனை செய்யுங்கள். இப்போது நாட்டில் நடப்பதெல்லாம் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள சட்டங்களில் பிறரது தலையீடு இருந்ததால்தான் நடக்கின்றனவா? இப்போது கொடுக்கப்பட்டு வரும் சிறு சிறு அடிகள் இறைவன் வெறுப்படைந்ததன் காரணமாகத்தான் நம்மீது விழுகின்றனவா? என்பதை கவனமாக சிந்திக்கும்படி மக்களிடம் நீங்கள் கூறுங்கள்.

இப்போது பத்திரிகைகளில் இவ்வாறு எழுதியுள்ளனர். மற்ற இடங்களிலும் இவர்களது அறிக்கைகள் வந்துள்ளன. கடந்த குத்பாக்களில் இது தொடர்பாக பத்திரிகைகளில் வந்துள்ள இவர்களது அறிக்கைகளை நான் படித்துக் காட்டியிருக்கின்றேன். இறைவனை வெறுப்படையச் செய்ததன் காரணமாகவே இவையெல்லாம் நடந்துள்ளன என அதில் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், இறைவன் ஏன் வெறுப்படைந்துள்ளான் என்பது இவர்களுக்கு புரியவில்லை. ஏன்? வெறுப்படைந்தான் என்பதைப் பற்றி சிந்தனை செய்யுங்கள். இறைவன் எனக்கு ஆதரவாக அடையாளங்களை காட்டுவான் என வாதம் செய்கின்ற ஒருவர் அறிவித்தார். அந்த அடையாளங்களை பார்த்து சிந்தனை செய்யுங்கள். மேலும் இறைவனால் அனுப்பப்பட்டவரை மறுப்பதிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள். அல்லாஹ் கொடுமை இழைப்பவர்களை விட்டு வைக்க மாட்டான். உலகின் முன்மாதிரிகள் நமக்கு முன்பு இருக்கின்றது. பாகிஸ்தானில் இந்த அநியாயமான சட்டத்தை மட்டும் அரசாங்கம் நிறைவேற்றி விட்டு சும்மா இருந்துவிடவில்லை. மாறாக பல அஹ்மதிகளும் அவர்கள் அஹ்மதிகளாக இருக்கின்ற ஒரே காரணத்திற்காக ஷஹீதாக்கப் பட்டிருக்கின்றார்கள். இன்று வரை ஷஹீதாக்கப்பட்டு வருகின்றார்கள். காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்ட காரணத்திற்காக அவர்கள் தமது உயிரை துறக்க வேண்டியதாயிற்று. கொடுமை இழைப்பவர்கள் தமது கொடுமையில் முன்னேறிச் செல்வதற்கு இந்த சட்டம்தான் அவர்களுக்கு தைரியத்தை வழங்கியிருக்கின்றது. இப்போது ஒன்றிரண்டு வழக்குகளில் அரசாங்கம் இத்தகு கொடுமை இழைப்பவர்களுக்கு தண்டனை வழங்கியிருந்தாலும் இந்த கொடுமையான அநீதியான சட்டம் இருக்கும் வரை எந்த அரசாங்கம் இனி

வந்தாலும் இந்த அநீதியை இழைப்பதில் சரிசமமாக அவர்களும் பங்கு பெறுவார்கள். எவ்வாறிருப்பினும், நாம் இந்த உலகவாதிகளிடமிருந்து எதையும் பெற வேண்டியதில்லை. ஆனால், கருணையின் உணர்வுகள் காரணமாகவும் நாட்டுப்பற்று ஈமானின் ஒரு பகுதியாக இருக்கின்றது என்ற விஷயமும் நம்மை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இது பற்றி கவனமூட்டும்படி செய்திருக்கின்றது. சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமென்றால், இறைவனது பிடியிலிருந்து வெளியே வரவேண்டுமென்றால் நீதியின் எதிர்பார்ப்புகளை நீங்கள் நிறைவேற்றியாக வேண்டும். உங்களது பக்கத்து நாடான ஆப்கானிஸ்தானிடம் இருந்து பாடம் படித்து கொள்ளுங்கள். அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்தில் இரு நபர்கள் ஷஹீதாக்கப்பட்டனர்.

**அவர்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் எனக்கு ஆறுதல் கூறியவாறு இவ்வாறு என்னிடம் கூறினான்: அந்த துன்பம் மற்றும் கடுமையான துக்கத்தால் நீ வேதனையடைந்து கவலைப்பட வேண்டாம். ஏனென்றால் உங்களில் இருவர் கொலை செய்யப்பட்டால் இறைவன் உம்முடன் இருக்கின்றான். அவன் அந்த இருவருக்குப் பகரமாக ஒரு சமுதாயத்தை உம்மிடம் கொண்டு வருவான். அவன் தனது அடியாருக்கு போதுமானவனாவான். இறைவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் பெற்றவன் என்பது உமக்கு தெரியாதா?

எனவே இன்றும் அஹ்மதிய்யத்தின் காரணமாக ஷஹீதாக்கப் படுகின்றவர்கள் ஒருபோதும் தங்கள் ஈமானுக்கு களங்கம் ஏற்பட விட்டதேயில்லை. அவர்கள் நிச்சயமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இறைவன் செய்து வாக்குறுதிகளிலிருந்தும் பலன் பெறுபவர்களாக இருப்பார்கள். இந்த இருவரை ஷஹீதாக்கியதன் காரணமாக அஹ்மதிய்யத்தின் செடியை அவர்கள் வேருடன் பிடுங்கி விட்டதாக நினைக்கின்றார்களா? இதன் காரணமாக உலகிலிருந்து அஹ்மதிய்யத் அழிந்து போய் விடுமா? இன்று குறைவான எண்ணிக்கையிலிருந்தாலும் அஹ்மதிகள் ஆப்கானிஸ்தானிலும் இருக்கத்தான் செய்கின்றனர். அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப சமுதாயங்களை ஜமாஅத்தில் இணையச் செய்துள்ளான். ஒவ்வொரு சமுதாயத்திலுமுள்ள நல்லியல்பு கொண்ட மக்கள் ஜமாஅத்தில் இணைகின்றார்கள். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆப்கானிஸ்தான் தொடர்பாக விடுத்த எச்சரிக்கையானது இன்று வரை நிறைவேறிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். இன்றுவரை ஆப்கானிஸ்தானில் அமைதியின்மை நிலவி வருகின்றது. இறைவனின் மஸீஹின் சொற்கள் இவையாகும்.

அந்தோ! அந்த அறிவற்ற அமீர் என்ன செய்து விட்டார்? அப்படிப்பட்ட அப்பாவியான ஒரு மனிதரை கொடூரமாக கொலை செய்து தன்னைத்தானே அழித்துக் கொண்டார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

காபூலின் மண்ணே! நீ சாட்சியாக இரு. உன் மீது கடுமையான குற்றம் இழைக்கப்பட்டு விட்டது. பாக்கியமற்ற பூமியே! நீ இறைவனின் பார்வையிலிருந்தும் வீழ்ந்து விட்டாய். நீ அந்த பெருங்கொடுமை இழைக்கப்பட்ட இடமாக இருக்கின்றாய்.

பார்க்கும் கண்களுக்கும் அறிவுள்ளவர்களுக்கும் இந்த சொற்கள் போதுமான சான்றாக திகழ வேண்டும். எந்த நபர் இந்த சொற்களை கூறியுள்ளாரோ அவர் நிச்சயமாக இறைவனால் அனுப்பப்பட்ட தூதராவார். அவர் இறைவனுடன் தொடர்புபடுத்தி ஒரு விஷயத்தை கூறுகின்றார். இன்று நூறு ஆண்டுகள் கழிந்த பிறகும் கூட இன்னும் அந்த சொற்களிலுள்ள தாக்கத்தின் விளைவுகளை நாம் பார்க்கின்றோம். மல்லவிகளுக்கு அஞ்சி நடந்த அந்த அரசனை எந்த மல்லவியாவது காப்பாற்ற முடிந்ததா? அல்லது அந்த அரசனின் குடும்பத்தைத்தான் காப்பாற்ற முடிந்ததா? மேலும் இன்று வரை அங்கு நிலவி வரும் அமைதியின்மை யானது இந்த சொற்கள் இறைவனின் ஒரு சிறந்த அடியாரின் எச்சரிக்கையாகும் என்பதை நிரூபிக்க போதுமானதாக இல்லையா? நான் எனது நாட்டை சார்ந்த சகோதரர்களுக்கு இதை மட்டும் கூற விரும்புகிறேன். அரசாங்கத்திடமும் படித்த பொதுமக்களிடமும் நான் கூறிக் கொள்வது நீங்கள் அறிவுடன் செயல்பட வேண்டும். மக்களை உங்களது இறைவனாக ஆக்கக் கூடாது. இறைவனின் உண்மையான அச்சத்தை உங்கள் உள்ளங்களில் உருவாக்குங்கள்.

பாகிஸ்தான் மண் முஸ்லிம்களின் சுதந்திரத்திற்காக பெறப்பட்டதாகும். இஸ்லாத்தின் அழகிய போதனையை செயல்படுத்திக் காட்டும் வகையில் எல்லா மதங்களுக்கும் தத்தமது மதங்கள் பற்றி எடுத்துக் கூறும் சுதந்திரம் இந்த பாகிஸ்தானிலுள்ள எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே காயிதே அஃலம் (முஹம்மது அலி ஜின்னா சாஹிப்) அவர்கள் இந்த நாட்டை உருவாக்கினார்கள். எல்லாருக்கும் அவர்களுக்குரிய உரிமையை வழங்கி பாகிஸ்தானில் உள்ள ஒவ்வொரு

குடிமகனுக்கும் அவருக்குரிய உரிமையை வழங்க வேண்டும். அவர் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்ற பாகுபாடின்றி அவருக்குரிய உரிமையை வழங்க வேண்டும் என்பதே அன்னாரின் வழிகாட்டலாக இருந்திருக்கின்றது. ஆனால், அரசாங்கங்கள் மற்றவர்களின் மார்க்க விஷயங்களில் தலையிட ஆரம்பித்தால் மேலும் நீதி இல்லாமல் இருந்தால், ஒரு சாராரின் உரிமைகள் பறிக்கப்படுவதாக இருந்தால் இன்னொரு சாராரிடம் அவர்கள் செய்ய விரும்புவதை செய்யட்டும். அதனால் நீதிமன்றத்திற்கு அவமரியாதை ஏற்பட்டால் ஏற்படட்டும் என்ற நிலை இருந்தால் இவை அனைத்தும் நீதியல்ல. மாறாக அநீதியாகும்.

எனவே உலக அடிப்படையில் நீதியின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப் படாமல் இருக்கும்போது அல்லாஹ்வை சார்ந்திருப்பவர்கள் மார்க்கம் என்ற பெயரில் அநீதியின் ஆட்டுரலில் அரைக்கும்போது பின்னர் அப்படிப்பட்ட மக்களும் அப்படிப்பட்ட அரசாங்கமும் இறைவனின் அருட்கொடைகளை பெற உரிமை உடையவர்களாக இருக்க முடியாது. எனவே எனது நாட்டை சார்ந்தவர்களும் அல்லாஹ்வுக்கு அஞ்ச வேண்டும். அஹ்மதிகளாகிய நாங்கள் எல்லாரையும் விட மிகவும் அதிகமாக தங்களது நாட்டின் மீது நேசம் வைத்திருப்பவர்களாக இருக்கின்றோம். பாகிஸ்தானுக்காக எங்கள் உயிர்களை காணிக்கையாக தந்திருக்கின்றோம். பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தான் தோன்றிய சமயத்தில்கூட அதற்காக நாங்கள் எங்கள் உயிர்களை காணிக்கையாக தந்திருக்கின்றோம். இதற்காக உழைத்ததில் எங்களுக்கு பெரும் பங்கு இருக்கின்றது. பல்வேறு போர் சமயங்களில் நாம் நாட்டிற்கு தொண்டு செய்துள்ளோம். இன்னும் பல சந்தர்ப்பங்களில் நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு வகைகளில் அஹ்மதிகள் தொண்டு செய்வதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். பூகம்பம் வந்த சமயத்தில் அஹ்மதிகள் செய்த சேவைகள் குறித்து நான் கூறியிருந்தேன். பாகிஸ்தானிய அஹ்மதிகள் உலகில் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் எல்லாரையும் விட அதிகமாக பாகிஸ்தான் நிலைநிற்பதற்காகவும் நாடு நலம் பெறுவதற்காகவும் அவர்கள்தான் முயற்சி செய்து வருகின்றார்கள் என நான் கருதுகின்றேன். மேலும் நாட்டிற்காக அவர்கள் துஆவும் செய்கின்றார்கள். நமது பணியும் இதுதான்.

எனவே தத்தமது பகுதியிலுள்ள மக்களிடம் இறைவனுக்கு அஞ்ச வேண்டும் என்றும் நாட்டிற்கு எவ்விதத்திலும் ஊறு விளைவிக்கக்கூடாது என்றும் கூறுங்கள். பாகிஸ்தானில் மிகப்பெரும் எண்ணிக்கையில் அஹ்மதிகள் இருக்கின்றார்கள். அஹ்மதிகளின் துஆக்களினால்தான் பாகிஸ்தான் எஞ்சி நிற்கின்றது என்று நான் கருதுகின்றேன். அவ்வாறு இல்லையென்றால், நாட்டை நேசிப்பதாகக் கூறுகின்ற இந்த பெயர்தாங்கி முஸ்லிம்களின் செயல்கள் எப்படி இருக்கின்றதென்றால், ஒருபோதும் அவற்றால் பாகிஸ்தான் எஞ்சி நிலைத்திருக்க முடியாது. அவர்களது எல்லா முயற்சிகளும் பாகிஸ்தானை உடைப்பதற்குக் காரணமாக இருக்கின்றது. இவர்களில் ஒவ்வொருவரும் பாகிஸ்தானை பணையமாக வைத்து செயல்படுபவர்களாக இருக்கின்றனர். செய்திகளைப் படிக்கும் போதும் பார்க்கும் போதும் வியப்பாக இருக்கின்றது.

இன்று ஐரோப்பிய பாராளுமன்ற நடவடிக்கைகளை நான் தொலைக்காட்சியில் பார்த்தேன். ஒரு பாராளுமன்ற பெண் உறுப்பினர் மிகவும் கடுமையாக ஐரோப்பாவிலிருந்து பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் உதவிகளை நிறுத்த வேண்டும் என்ற கருத்தை எதிர்த்து அப்படிப்பட்ட கோரிக்கையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று கூறுவதை நான் பார்த்தேன். ஏனென்றால் பாகிஸ்தானிலுள்ள அரசியல் வட்டாரங்களிலிருந்தே இப்படிப்பட்ட கோரிக்கை அடங்கிய குரல் எழுப்பப்பட்டது. அவர்கள் அதற்கு தந்த ஆதாரம் என்னவென்றால், இப்படிப்பட்ட உதவிகளின் காரணமாக ஏழ்மை நிலையிலுள்ள பொதுமக்களுக்கு இதன் தாக்கம் ஏற்படும் என்பதேயாகும். எந்த நோக்கத்திற்காக இந்த உதவிகள் செய்யப்படுகின்றதோ அது தொடர்ந்து நிலைநிற்க வேண்டும். பாகிஸ்தானிற்கு வெளியிலிருந்து உதவிகள் கிடைக்க வேண்டுமா? கூடாதா? அதன் தேவை இருக்கின்றதா? இல்லையா? என்பது தனிப்பட்ட ஒரு பிரச்சனையாகும். ஆனால் இவர்களின் எண்ணம் எப்படி இருக்கின்றது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதற்கு எதிரில் நமது அரசியல்வாதிகளின் நிலை எப்படி இருக்கின்றது? அங்குள்ள பெண் அரசியல் தலைவியும் மற்ற அரசியல் தலைவர்களும் என்ன கூறுகிறார்கள் என்றால் ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐரோப்பிய நாடுகளிடமும் பாகிஸ்தானுக்கு அவர்கள் வழங்கி வரும் உதவிகளை நிறுத்தும்படி வலியுறுத்திக் கூற வேண்டும். இவ்வாறு தான் அங்குள்ள அரசாங்கத்திற்கு நாம் நெருக்கடி தர முடியும் என்கிறார்கள்.

பாருங்கள்! இவர்கள்தான் நாட்டின் மீது அனுதாபம் கொண்டவர்களாவர். இவர்கள்தான் இந்த நாட்டை பாதுகாப்பவர்கள் என்று குரல் எழுப்பக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். மற்றவர்களை அழைத்து எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று அவர்களை அழைக்கின்றார்கள். இவ்விஷயத்தில் சிலர் எந்த அளவு மற்றவர்களை தங்களுக்கு உதவி செய்ய அழைக்கிறார்கள் என்றால் இதனை அவர்கள் சொற்களால் கூறாவிட்டாலும் செயல் அளவில் நீங்கள் வந்து எங்கள் நாட்டை பாதுகாத்துத் தர வேண்டும் என்று மற்ற நாட்டவருக்கு அழைப்பு விடுத்துள்ளனர். எனவே இப்படிப்பட்ட மக்கள் நாட்டின் மீது அனுதாபம்

கொண்டவர்கள் அல்ல. மாறாக நாட்டிற்கு இழப்பை ஏற்படுத்துபவர்களாக இருக்கின்றார்கள். நாங்கள் 90 வருட கால பிரச்சனையை எளிதாக தீர்த்து விட்டோம் என்பது தலைவர்களுக்கு மகிழ்ச்சி இருக்கிறது.

அல்லாஹ் நமது நாட்டின் மீது கருணை காட்டுவானாக. இந்த அறிவுக் குருடர்களின் கண்களைத் திறப்பானாக. இவர்கள் சீர்திருந்தமாட்டார்கள் என்றால் நாட்டிற்காக உண்மையிலேயே வேதனைப்படுகின்ற நல்ல தலைவர்களை அல்லாஹ் இந்த நாட்டிற்கு வழங்குவானாக. அந்த தலைவர்கள் ஏழைகளை கருத்தில் கொள்பவர்களாகவும் தனது சுய கௌரவம் மற்றும் சுய நலன்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்காமல் நாட்டின் நலனுக்காக பணி செய்பவர்களாக அவர்கள் இருக்கட்டும். இவ்வகையில் ஒவ்வொரு அஹ்மதியும் இதற்காக துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக பாகிஸ்தானிலும் பாகிஸ்தானுக்கு வெளியிலும் இருக்கும் அஹ்மதிகள் இதற்காக துஆ செய்ய வேண்டும்.

அடுத்து, இந்தோனேஷியாவில் ஜமாஅத்தின் நிலைமைகள் குறித்தும் சிறிது கூற விரும்புகின்றேன். அங்கு மீண்டும் இப்போது எதிர்ப்பு நிலவுகிறது. மிக தொலைவிலுள்ள சிறு சிறு நகரங்களில் மிக குறைவான எண்ணிக்கையில் அஹ்மதிகள் இருக்கின்றனர். அங்கு அவர்களுக்கு கொடுமைகள் இழைக்கப் படுகின்றது. அவர்களது வீடுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தி அவற்றை உடைத்து விழச் செய்துள்ளனர். அவர்களை அச்சுறுத்தி மிரட்டி வருகின்றனர். இதன் மூலம் அஹ்மதிகள் ஜமாஅத்தை விட்டுவிட வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கின்றது. இந்த குழப்பங்களுக்கு பின்னால் அரசாங்கத்தின் சில நிறுவனங்கள் எதிரிகளுக்கு உள்ளூரில் உதவி செய்து இருக்கின்றது. இந்த குழப்பங்களை காரணமாக காட்டி பின்னர் அரசாங்கத்திடம் இந்த குழப்பங்கள் காரணமாக அஹ்மதிகளின் உயிர்களுக்கு ஆபத்து இருப்பதாலும் நாட்டின் அமைதி சீர்குலையும் அபாயம் இருப்பதாலும் இவர்களை முஸ்லிம் அல்லாதவர்கள் என அறிவிக்க வேண்டும் என்பதே இவர்களின் திட்டமாகும். பாராளுமன்றத்திலும் அரசாங்க அளவிலும் அப்போதுதான் அமைதியை நிலைநாட்ட முடியும் என்பது இவர்களது கோரிக்கையாக இருக்கின்றது. பாகிஸ்தானியர்களின் அதே திட்டத்தைத்தான் இங்கு செயல்படுத்த எதிரிகள் முனைந்திருக்கின்றனர். மிகவும் திட்டமிட்டு இந்த சூழ்ச்சியை இவர்கள் இப்போது கடைபிடித்திருக்கின்றார்கள். ஆனால், அல்லாஹ் இவர்களது எல்லா சதித்திட்டங்களையும் உடைக்கக் கூடியவனாக இருக்கின்றான். இன்ஷா அல்லாஹ் அவன் அந்த சதித்திட்டங்களை முறியடித்து விடுவான்.

இவ்வாறு நாம் அஹ்மதிய்யத்தை அழித்து விடுவோம் என்ற இவர்களது எண்ணம் ஒருபோதும் சரியானதாக நிரூபிக்க முடியாது. இது இவர்களது தறவான எண்ணமாகும். கடந்த நூறு வருடங்களுக்கும் மேல் இந்த முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆனால், எப்போதும் இவர்களது முயற்சிகள் தோல்வியைத்தான் தழுவியிருக்கின்றது. எங்கெல்லாம் இத்தகு முயற்சிகள் செய்யப்பட்டதோ அங்கெல்லாம் எதிரிகளுக்கு தோல்விதான் ஏற்பட்டது. இது மனிதன் செய்யும் பணியாக இருந்திருந்தால் எப்போதோ அஹ்மதிய்யா ஜமாஅத் அழிந்திருக்கும். ஆனால் இது இறைவனின் கைகளால் நடப்பட்ட செடியாகும். இந்த செடி மரமாகும். பூக்களைத் தரும். கனிகளைத் தரும் என்று அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வாக்குறுதியளித்துள்ளான். எனவே எவராலும் இதனை அழிக்க முடியாது. அஹ்மதிய்யத்தை இவர்கள் அழித்து விடுவார்களோ என்ற கவலை எப்போதும் நமக்கு இருந்ததில்லை. அல்லது இந்தோனேஷியா நாட்டிலிருந்தும் இவர்கள் அஹ்மதிய்யத்தை அழித்து விடுவார்களோ என்ற கவலையும் எப்போதும் நமக்கு இல்லை. அல்லாஹ்வின் அருளால் மிகவும் வலுவான ஈமானையுடைய தியாகங்கள் செய்யக்கூடிய அஹ்மதிகள் அங்கு இருக்கின்றார்கள். எங்காவது ஒன்றிரண்டு பேர் அச்சத்தின் காரணமாக பின்தங்கிய நிலையில் தங்களது ஈமானின் பலவீனத்தைக் காட்டினாலும் அல்லது அவர்களை இவர்கள் பயமுறுத்தி அதனால் அவர்கள் பின்தங்கி இருந்து விட்டாலும் அல்லாஹ் அவர்களை விட வலுவான ஈமானையுடைய அஹ்மதிகளை நமக்கு தருகின்றான். அல்லாஹ்வின் பரிமாற்றம் எப்போதும் இவ்வாறே இருந்திருக்கின்றது.

பாகிஸ்தானில் அஹ்மதிகளை முஸ்லிம் அல்லாதவர்கள் என அறிவித்து அஹ்மதிகளின் கைகளில் பிச்சை பாத்திரத்தை ஏந்த வைக்கும் எண்ணத்தில் இருந்தவர்களின் நிலை இறுதியில் எவ்வாறு ஆனது? அஹ்மதிய்யத்திற்கு அல்லாஹ் முன்பை விட விரிவான நிலையை வழங்கினான். அடுத்து வந்த நபரும் முன்பு இருந்ததை விட கடுமையான சட்டத்தை இயற்றினார். இனி இவர்களுக்கு தப்பிச் செல்ல வழியேயில்லை என்று அவர் நினைத்தார். ஆனால் அக்காலத்தில் முன்பு இருந்ததை விட வேகமாக அஹ்மதிய்யத் பரவியது.

மேலும் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான வழிகளையும் நமக்கு திறந்து தந்தான். இது மனிதனின் திட்டமாக இருந்திருந்தால் அதை செயல்படுத்த இதற்காக மேலும் பல வருடங்கள் நமக்கு தேவைப்பட்டிருக்கலாம்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் நான் உனது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று செய்த வாக்குறுதிக்கேற்ப அதனை அவன் ஒவ்வொரு நாளும் புது மகிமையுடன் நிறைவேற்றி வருகின்றான். எனவே அஹ்மதிய்யத்தை இவர்கள் அழித்து விடுவார்களோ என்ற கவலை ஒருபோதும் நமக்கில்லை. அல்லது அஹ்மதிகளின் ஈமானில் தடுமாற்றத்தை இவர்கள் ஏற்படுத்தி விடுவார்களோ என்ற கவலையும் நமக்கு இல்லை. ஆனால், ஒரு கவலை இருக்கிறது. அதற்காக நாம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக.

இந்தோனேஷியாவிலுள்ள அஹ்மதிகளும் உலகின் ஏனைய நாடுகளில் வாழும் அஹ்மதிகளும் எப்போதும் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் ஒருபோதும் சட்டத்தை உங்களது கைகளில் எடுக்க கூடாது. சட்டத்தின் எல்லைக்குள் இருந்தவாறு உங்களது உரிமைகளை பெற முயற்சி செய்யுங்கள். எந்த எதிர்ப்பின் விளைவாகவும் இறைவனின் படைப்பினங்களிடம் கருணை காட்டுவதை விட்டுவிடக் கூடாது. எந்த எதிர்ப்பின் விளைவாகவும் அல்லாஹ்வின் உண்மையான போதனைகளையும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது தூதுச் செய்தியை பரப்புவதில் இருந்தும் நீங்கள் பின்னோக்கி சென்று விடாதீர்கள். இந்த பணிகளை நாம் செய்தாக வேண்டும். இதற்காக தியாகங்களும் செய்ய வேண்டியது வரும். சோதனைகளும் வரும். இறை இயக்கங்களுடன் எப்போதும் இப்படிப்பட்ட பரிமாற்றம்தான் இருந்திருக்கின்றது. ஆனால் அல்லாஹ்வின் உதவியும் வரும் - இன்ஷா அல்லாஹ். எப்போதும் அவனது உதவி வரும். முன்பை விட அதிகமாக அல்லாஹ் தனது வல்லமையை வெளிப்படுத்தும் காட்சிகளை நமக்கு காட்டுவான்.

நமது பணி தூதுச் செய்தியை எட்ட வைப்பதும் மனிதயினத்திடம் அனுதாபம் காட்டுவதுமாகும். இதனை நாம் செய்ய வேண்டும். இந்தோனேஷியாவில் எங்கு சுனாமி வந்தபோதோ எந்த இடத்தில் அதனால் பாதிப்பு ஏற்பட்டதோ அங்கு இதற்கு முன்னர் ஜமாஅத்திற்கு கடுமையான எதிர்ப்பு இருந்து வந்தது. சுனாமியின் போது அங்கு சென்றும் நாம் அங்குள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்தோம். நம்மிடமிருந்து அவர்கள் உதவிகளைப் பெற்றுக் கொண்டார்கள். நம்முடைய உள்ளம் எப்போதும் மனித இனத்திடம் அனுதாபம் காட்டும் உணர்வுகளால் நிரம்பியிருக்கும். எப்போதும் இந்த மக்களுக்கு உதவி செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். அவர்கள் நம்முடன் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்பது பற்றி நமக்கு எந்த காழ்ப்புணர்ச்சியும் ஏற்படாது.

நதியைக் கடந்து செல்வதற்காக தேள் ஒன்று பசுவின் உதவியை நாடியது. பசுவும் உதவி செய்து தனது முதுகில் தேளை சுமந்து நதியில் நீந்திச் சென்றும், கரையை எட்டியதும் தேள் பசுவை கொட்டியது. வீணாக தேளை சுமந்து வர வேண்டிய தேவை என்ன இருக்கின்றது? என மக்கள் பசுவிடம் கேட்டனர். அதற்கு அந்த பசு எனது இயல்பில் அல்லாஹ் வைத்துள்ள இயல்பிற்கு ஏற்ப நான் செயல்படுகிறேன். அந்த தேளின் இயல்பில் பிறரை கொட்டி தீங்கு விளைவிக்கும் தன்மை இருக்கின்றது. அதற்கேற்ப அது செயல்படுகிறது என அந்த பசு பதில் கூறிற்று. நாம் மனித இனத்திற்கு தொண்டு செய்தாக வேண்டும். இதற்கெதிரில் இம்மக்கள் நம்மிடம் எவ்வாறு பரிமாறுவார்கள் என்பதை பார்க்காமல் எவர் கஷ்டத்தில் இருக்கின்றாரோ அவருக்கு நாம் உதவி செய்ய வேண்டும். நற்கூலியை நாம் இவர்களிடம் பெற வேண்டாம். இறைவனிடத்தில் நமக்குரிய நற்கூலி இருக்கின்றது. அஹ்மதிகள் துஆவுடனும், பொறுமையுடனும் இந்த பணிகளை செய்து கொண்டிருக்க வேண்டும். இறைவனின் கட்டளையும் இதுவேயாகும். இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் ***வஸ்தயீனு பிஸப்ரி வஸ்ஸலாத் வ இன்னஹா லகபீரத்துன் இல்லா அலல் ஹாஸியீன்*** - பொறுமையுடனும் தொழுகையுடனும் இறை உதவியை கேளுங்கள். நிச்சயமாக பணிவை மேற்கொள்பவர்களை தவிர மற்ற அனைவர் மீதும் இது மிகப்பெரும் சுமையாகும். (2:46) என்று கூறுகின்றான். பிரிதோரிடத்தில் கூறுகின்றான்.

***யா அய்யுஹல்லாதீன ஆமனுஸ்தயீனு பிஸ்ஸப்ரி வஸ்ஸலாத் இன்னல்லாஹா மஅஸ் ஸாபிரீன்*** - நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்விடம் பொறுமை, தொழுகை ஆகியவற்றின் மூலம் உதவி கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். (2:154)

இந்த வசனங்களில் நீங்கள் மிகுந்த பணிவுடன் அல்லாஹ்வின் முன்னிலையில் குனிந்திருக்க

வேண்டும் என அல்லாஹ் கூறியுள்ளான். எதிரிகள் தரப்பிலிருந்தும் உங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் உங்களுக்கு சோதனையாக இருக்கின்றது. உறுதியான பாதங்களுடன் நிலைநிற்பதுதான் பொறுமையாகும். உங்கள் மீது இழைக்கப்படுகின்ற கொடுமைகளுக்கும் துன்பங்களுக்கும் எதிரில் எந்த உலக உதவியையும் நாடுவதற்குப் பகரமாக அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும். அல்லாஹ், அவனது தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப எந்த போதனைகளை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு தந்துள்ளார்களோ அதற்கேற்ப செயல்பட வேண்டும். தீமைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் செயல்பட்டால் அல்லாஹ்வின் உதவி உங்களிடம் வரும். கண்டிப்பாக வரும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்திற்கே இறுதி வெற்றி கிடைக்கும். இது அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த வாக்குறுதியாகும். அதாவது உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத் எல்லாவற்றின் மீதும் வெற்றி பெறும். அல்லாஹ் தனது தூதர்களிடம் இவ்வாறு கூறுகின்றான். **ஃபலா தஹ்ஸபன்னல்லாஹு முஹ்லிப வஃதஹீர்ருஸுல இன்னல்லாஹா அஸீஸுன் ஸுன்திகாம்** - அல்லாஹ் தனது தூதர்களிடம் செய்த வாக்குறுதியில் மாறு செய்வான் என ஒருபோதும் அவனைப் பற்றி நீங்கள் கருத வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் வல்லோனும் தண்டனை வழங்குபவனுமாவான்.

அல்லாஹ் தனது அன்பிற்குரியவர்களின் ஜமாஅத்திற்கு எப்போதும் உதவி செய்வான். ஆனால், இந்த மக்களின் அறிவற்ற நிலையும், இவர்கள் இழைக்கும் கொடுமைகளும் இவர்கள் தண்டனை வழங்கும் இறைவனின் பிடியில் வராமல் இவர்களை காப்பாற்றும்படி நீங்கள் துஆ செய்யுங்கள். வெற்றியை அல்லாஹ்தான் நமக்கு வழங்குவான். ஆனால், நான் மிகைத்திருப்பவனாகவும் தண்டனை வழங்குபவனாகவும் இருக்கின்றேன் என அல்லாஹ் கூறியுள்ளான். பல வழிகளில் அல்லாஹ் இவர்களை எச்சரித்துள்ளான். அதனை இவர்கள் புரிந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும். நாங்கள் தெளிவான அடையாளங்களை கண்ட பிறகு காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டிருக்கின்றாம். எனவே, தற்காலிகமாக நீங்கள் எங்களுக்கு துன்பங்களை தரலாம். இந்தோனேஷியா, பங்களாதேஷ், இலங்கை, பாகிஸ்தான் போன்ற இடங்களிலும் வேறு எந்த நாட்டிலும் தற்காலிகமாக சில துன்பங்களை நீங்கள் எங்களுக்கு தரலாம். ஆனால் நாங்கள் ஜமாஅத்தை ஏற்றுக் கொண்டதன் விளைவாக எங்களது உள்ளங்களுக்கு கிடைத்திருக்கும் நிம்மதியை உங்களால் பறிக்க முடியாது. ஏனென்றால், உண்மையான நம்பிக்கையாளர்களின் உளளங்களுக்கு நிம்மதியை வழங்குவதாக அல்லாஹ் வாக்குறுதியளித்துள்ளான் என்று நீங்கள் தெளிவாக எதிரிகளிடம் கூறி விடுங்கள். நாங்கள் எப்போதும் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்று துஆ கேட்கின்றோம். நீங்கள் இழைக்கும் கொடுமைகளின் காரணமாக நாங்கள் நேர்வழியிலிருந்தும் ஒருபோதும் திசைமாறி சென்று விடக்கூடாது. மேலும் அநீதிக்கான பதிலை அநீதியின் மூலம் தரக்கூடியவர்களாக நாம் ஆகிவிடக் கூடாது. நம்மிடம் ஒருபோதும் பொறுமையின்மை உருவாகக் கூடாது. இன்னல்லாஹா மஅஸ் ஸாபிரீன் - நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான் என்ற அவனது அறிவிப்பை ஒருபோதும் நாம் மறந்து விடக் கூடாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையாவீர்கள். இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்; எல்லா திசைகளிலும் இதன் கிளைகள் படரும்; பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.

எனவே இறைவனின் வசனத்தில் நம்பிக்கை கொண்டு இடையில் ஏற்படும் சோதனைகளுக்கு அஞ்சாதவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். ஏனென்றால் சோதனைகள் வருவதும் மிகத் தேவையே. பைஅத் வாதத்தில் உண்மையாளர் களையும் பொய்யர்களையும் சோதிக்கவே இறைவன் அவ்வாறு செய்கிறான். ஏதாவது சோதனையில் தடுமாறியவன் இறைவனுக்கு சிறிதும் இழப்பு ஏற்படுத்துவதில்லை. மேலும் தப்பெண்ணம் அவனை நரகிற்கு எடுத்துச் செல்லும். அவன் பிறக்காமல் இருந்தால் அது நன்றாக இருந்திருக்கும். ஆனால் இறுதி வரை பொறுமையை மேற்கொள்வதுடன் சோதனை பூகம்பங்களையும், ஆட்டங்காணச் செய்யும் புயல்களையும் தாங்கி சமுதாயத்தின் ஏளனப் பேச்சையும் எள்ளி நகையாடுவதையும் இழிவையும் பொருட்படுத்தாது இருப்பவரே இறுதியில் வெற்றி அடைவார். அருள்களின் வாசல்கள் அவர்களை வரவேற்க திறக்கப்படும்.

**என் ஜமாஅத்திற்கு அறிவிக்கும்படி இறைவன் எனக்கு கூறியுள்ளதாவது,**

உலகப் பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்படுதலில் எத்தகுதியையும்

இழக்காத நம்பிக்கையை கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவராவர். (அல் வஸிய்யத் பக்கம் 11)

அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவருக்கும் இந்த உண்மையான பாதையில் செல்லும் நற்பேற்றை வழங்குவானாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளுக்கு ஏற்ப நடப்பதற்கும் அவர்களது விருப்பத்திற்கேற்ப உண்மையான முறையில் இஸ்லாத்தின் போதனைகளை புரிந்து செயல்படும் நல்வாய்ப்பை நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆமீன்.

************

*KUTHBA*

**HAZRAT MIRZA MASROOR AHMAD**

***KALIFATHUL MASIH V***

***ON 23.11.07 AT LONDON***

***TRANSLATED BY : MAULVI M.RAFEEQU AHMAD***

***PUBLISHED BY :*** **MAJLIS KHUDDAMUL AHMADIYYA, MELAPALAYAM,TAMILNAD**

***Telefax : 0462 – 2352456***